SLECIC

# இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதி கூட்டுத்தாபனம்

## நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

# வெற்றிடங்கள்

பின்வரும் பதவிகளுக்காக பொருத்தமான தகைமை வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பங்களை இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அழைக்கின்றது.

**01. பிரதிப் பொது முகாமையாளர் பதவி (சந்தைப்படுத்தல்) – HM 1-3 - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் சந்தைப்படுத்தல், வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், வர்த்தகத்தில் அல்லது ஏனைய தொடர்புடைய துறையில் ஒரு இளமாணிப் பட்டம்.

   அத்துடன்

   சம்பந்தப்பட்ட துறையில் பட்டப் பின்படிப்புத் தகுதி (Masters' Degree) அல்லது பதவிக்குரித்தான பாடப்பரப்பில் தொடர்புடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார்ந்த நிறுவனத்தின் இணை அங்கத்துவம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை/ சட்டப்பூர்வ வாரியம்/ சபை, நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் நிரூபிக்கப்பட்ட சாதனைப் பதிவுடன் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவம் மற்றும் அதில் 02 வருடகாலம் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையிலாக இருக்க வேண்டும்.

2. பதவிக்குரித்தான இயைபுடைய துறையில் அங்கீகரிக்கப்பட்ட பட்டய தொழில்சார் நிறுவனத்தின் முழுமையான/ பின்பற்றும் அங்கத்துவம்

   மற்றும்

   கூட்டுத்தாபனம், நியாயாதிக்க சபை/ நிறுவனம், அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனியார் துறை நிறுவனமொன்றில் முகாமைத்துவ நிலைப் பதவியொன்றில் குறைந்தபட்சம் 15 வருடகால அனுபவம்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

   அல்லது

2. பதவிக்குரித்தான தொடர்புடைய பாடப்பரப்பில் சிரேஷ்ட முகாமையாளர் (HM) நிலை/ மட்டம் II பதவியொன்றில் குறைந்தபட்சம் இரண்டு (02) வருடகால திருப்திகரமான சேவை.

**வயது:** 35 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம்:** HM 1-3 ரூபா [152,500 - 15 x 4,100 -214,000] (01/2025 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்) + வாழ்க்கைச் செலவுப் படி + தொழில்சார்ந்த கொடுப்பனவுகள் + KPI ஊக்குவிப்பு + மருத்துவ நன்மைகள் + கூட்டுத்தாபனத்தினால் பராமரிக்கப்படும் வாகனம் அல்லது வாகனக் கொடுப்பனவு + எரிபொருள் கொடுப்பனவு மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**02. கனிஷ்ட முகாமையாளர் (சந்தைப்படுத்தல்) – JM 1-2 (தரம் II) - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் சந்தைப்படுத்தல், வியாபார நிர்வாகம், வியாபார முகாமைத்துவம், வர்த்தகத்தில் அல்லது ஏனைய தொடர்புடைய துறைகளில் ஒரு இளமாணிப் பட்டம்
2. பதவிக்குரித்தான விடயப்பரப்பில் இயைபுடைய ஒரு அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார்ந்த பட்டய நிறுவனத்தின் இடைநிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

   அல்லது

2. பதவிக்குரித்தான தொடர்புடைய பாடப்பரப்பில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1) நிலை/ மட்டம் II பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம்:** JM 1-2 ரூபா [74,010-10X1, 360-18X2,040-124,330] (01/2025 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்) + வாழ்க்கைச் செலவுப் படி + தொடர்பாடல் கொடுப்பனவுகள் + KPI ஊக்குவிப்பு + மருத்துவ நன்மைகள் + மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**03. கனிஷ்ட முகாமையாளர் (உரிமைக் கோரல்கள் மற்றும் அறவீடுகள்) – JM 1-2 (தரம் II) - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக் குழுவால் அங்கீகரிக்கப்படும் சட்டம், வர்த்தகம், கணக்கியல், நிதி அல்லது ஏனைய தொடர்புடைய துறைகளில் ஒரு இளமாணிப் பட்டம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

   அல்லது

2. பதவிக்குரித்தான தொடர்புடைய பாடப்பரப்பில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1) நிலை/ மட்டம் II பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம்:** JM 1-2 ரூபா [74,010-10X1, 360-18X2,040-124,330] (01/2025 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்) + வாழ்க்கைச் செலவுப் படி + KPI ஊக்குவிப்பு மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**04. கனிஷ்ட முகாமையாளர் (மனிதவளங்கள் மற்றும் நிர்வாகம்) – JM 1-2 (தரம் II) - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள்**

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்படும் மனிதவள முகாமைத்துவம், வியாபார நிர்வாகம் (மனிதவளம்), வியாபார முகாமைத்துவம் (மனிதவளம்), பொது நிர்வாகம், பொது முகாமைத்துவம், வர்த்தகம் அல்லது ஏனைய தொடர்புடைய துறைகளில் ஒரு இளமாணிப் பட்டம்

**உள்வாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2)**

1. மேற்கூறிய வெளிவாரி விண்ணப்பதாரிகளுக்கு தேவைப்படுத்தப்படும் தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

   அல்லது

2. பதவிக்குரித்தான தொடர்புடைய பாடப்பரப்பில் முகாமைத்துவ உதவியாளர் - தொழில்நுட்பம் அல்லாத (MA 1) நிலை/ மட்டம் II பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவையைப் பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது:** 22 வயதிற்குக் குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம்:** JM 1-2 ரூபா [74,010-10X1, 360-18X2,040-124,330] (01/2025 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்) + வாழ்க்கைச் செலவுப் படி + KPI ஊக்குவிப்பு + மருத்துவ நன்மைகள் மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**05. பொது முகாமையாளருக்கான பிரத்தியேக உதவியாளர் - MA 1-2 (தரம் III) - 01 பதவி**

**வெளிவாரி விண்ணப்பதாரிகள் (பின்வரும் 1 அல்லது 2 அல்லது 3)**

1. க.பொ.த (சா/த) பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
   i. சிங்களம் / தமிழ்
   ii. ஆங்கில மொழி
   iii. கணிதம்
2. க.பொ.த (உ/த) பரீட்சையில் (பொது வினாத்தாள் தவிர்ந்த) மூன்று பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
3. செயலகப் பயிற்சியில் NVQ 3ஆம் நிலையில் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**உள்வாரி விண்ணப்பதாரிகள்**

பின்வரும் தகைமைகளைக் கொண்ட ஆரம்ப நிலை - தேர்ச்சி பெற்ற மற்றும் ஆரம்ப நிலை - தேர்ச்சியற்ற நிலை/ மட்டம் ஊழியர்கள் விண்ணப்பிக்க தகுதி பெறுவர்.

**கல்வி:**

1. க.பொ.த (சா/த) கணிதம் பரீட்சையில் பின்வரும் பாடங்கள் உட்பட நான்கு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல்.
   i. சிங்களம் / தமிழ்
   ii. ஆங்கில மொழி
   iii. கணிதம்
2. தொடர்புடைய துறையில் NVQ 3ஆம் நிலையில் தகைமைகளைப் பெற்றிருத்தல்.

**வயது:** 18 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருக்க வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.

**சம்பளம்**: MA1-2 ரூபா [46,220 -10 x540 – 7x630-12x1,080-12x1,280-84,350] (01/2025 MSD சுற்றுநிருபத்தின் பிரகாரம்) + வாழ்க்கைச் செலவுப் படி + KPI ஊக்குவிப்பு + மருத்துவ நன்மைகள் மற்றும் சுற்றுநிருபத்தின் பிரகாரம் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய கொடுப்பனவுகள்.

**பொது நிபந்தனைகள்**

***சகல விண்ணப்பதாரர்களும்***

- இலங்கைப் பிரஜையாக இருக்க வேண்டும்.
- பதவிக்குரித்தான கடமைகளை மேற்கொள்வதற்கான உடல் மற்றும் உள தகுதிகளைக் கொண்டிருக்க வேண்டும்.
- நன்னடத்தையுடையவராக இருக்க வேண்டும்.

ஆர்வமுள்ள விண்ணப்பதாரிகள் (https://www.slecic.lk/web/ index.php/en/) எனும் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கு பிரவேசிக்குமாறு வேண்டப்படுகின்றனர் என்பதுடன் மேற்கூறிய பதவிகள் தொடர்பான விபரமான தகவல்களையும் பெற்றுக்கொள்ளலாம். அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியதிகள் சபை என்பவற்றில் கடமையாற்றும் ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டால் அவர்களை விடுவிக்க முடியும் எனும் பரிந்துரை சகிதம் தமது விண்ணப்பங்களை தொடர்புடைய நிறுவனங்களின் தலைமையின் ஊடாக அனுப்ப வேண்டும்.

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிப்பவர்கள் தொடர்புடைய சான்றிதழ்களின் பிரதிகளுடன் 02 தொடர்பற்ற பரிந்துரையாளர்கள் விவரத்துடன் 2026 ஜூன் 05ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கும் வகையில் "தலைவர் மற்றும் முகாமைத்துவப் பணிப்பாளர், இலங்கை ஏற்றுமதி கடன் காப்புறுதிக் கூட்டுத்தாபனம், நிலை 4, NDB-EDB டவர், இல. 42, நவம் மாவத்தை, கொழும்பு-02 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.